# செங்கோல்

மார்ச் 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் ஆனந்தம்

வேதனையின் வேள்வியில்
வேளை தோறும் நான்
வேகுகின்றேன்..

தோல்வியின் மழையில்
நாள் தோறும் நான்
தோய்கின்றேன்.

கவலைக் கடலிலிருந்து
கரை சேர முடியாது நான்
தத்தளிக்கின்றேன்

விரக்தியின் தவிப்புக்கள்
விடாப்பிடியாக என்னை
விரட்டுகின்றன

உற்ற உறவுகளும்
ஊமையாக நான்
உள்ளம் உடைகின்றேன்

சோதனைகளையும்
துன்பங்களையும்
சொந்தமாக்கி நான்
சோர்ந்து போகின்றேன்

மனச் சுமை தாங்க
மனிதரின்றி நான்
சுருண்டு போகின்றேன்
ஆயினும்

நாளைய விடியலாவது
நல்ல சேதி நல்குமா?
என நான் அலைந்த போது,
நல்லாயனே!

கரம் தந்து கரை சேர்க்கும்
உன் கருணையுள்ளம்
என் துன்ப சுமை தாங்குமே
என்ற உன் அன்பு மொழி
அமைதியற்ற என் ஆன்மாவிற்கு
ஆனந்தத்தை அளித்தது.

ம. பிரான்சிஸ்க்
வெற்றிலைக்கேணி
(நன்றி: ஒளியை நோக்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து . . .

கடந்த பல வருடங்களாக சண்டை, அழிவு, அமைதியின்மை பற்றி பேசி வந்த நமக்கு அமைதி பற்றி பேச சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

யாரை சந்தித்தாலும் எந்த இடம் போனாலும் சமாதானம், அமைதி பற்றிய செய்திகள் உறையாடலில் புகுந்து கொள்கிறது. எல்லோருடைய மனதிலும் ஒரு எதிர்பார்ப்பு. நாம் அனுபவிக்கின்ற யுத்தமற்ற சூழல் தொடராதா என்ற ஏக்கம்.

அது மட்டும் இருந்திருந்தால் பரவாயில்லை. ஆனால் யுத்தமற்ற சூழல் பற்றி பேசும் உறையாடலில், இன்னுமொரு யுத்தம் வந்தால்!! என்ற அங்கலாய்ப்பும் சேர்ந்தே தெரிகிறது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் யுத்தம், அழிவு என்பனவற்றிற்கு நாமும் முகம் கொடுத்திருப்போம். ஒருவேளை அழிவுச் செயல்களை கண்ணால் கண்டுமிருப்போம். ஆனால் யுத்த சூழ்நிலை பற்றி எம்மால் செய்வதற்கு எதுவும் இல்லை. அது எல்லாம் சாமாதானப் பேச்சாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அரசாங்கத்திற்கும் சொந்தமானது என்று சொல்லி, வாளாதிருந்தோம்.

எம்மைப் போலவே இன்னும் நூற்றுக்கணக்கானோர்!!!

ஏன்..! இலங்கையில் இருக்கும் கோடிக்கணக்கானோர் அமைதியை கொண்டு வரும் பொறுப்பு எம்முடையதல்ல என்று ஒதுங்கி நின்று, யாரோ ஒருவர் அமைதியை கொண்டு வருவார் என காத்திருப்பதையும் காண்கிறோம்.

ஆலயங்களில், வீடுகளில் அமைதிக்காக பிரார்த்தனை செய்தோம். ஆனாலும் எம்மாலும் ஏதாவது செய்ய முடியுமா? என்ற வினாவை எழுப்பிப் பார்த்திருக்கிறோமா? இன்னுமொரு யுத்தம் வருமா? என்ற அங்கலாய்ப்பிலும் பார்க்க யுத்தம் வராதிருக்க என்னால் ஏதாவது செய்ய முடியுமா என்ற வினாவை எழுப்பி பார்ப்பது பொருத்தமாகும். நான் வாழுகின்ற சூழலில் அமைதி உருவாக, அமைதி நிலைக்க என்ன செய்திருக்கிறேன்? என்ன செய்யப் போகிறேன்?

நமது அயலிலே, நண்பரிடையே, பணிமனைகளிலே எனது பணி என்ன? சாதாரண மக்களாக அமைதி வளர ஆற்றக் கூடிய பணிகள் பற்றிய கருத்துகள் இருந்தால் பிரசுரத்திற்காக அனுப்பிவையுங்கள்.

செங்கோல் சஞ்சிகையை தொடர்ந்து பெற விரும்பினாலோ அல்லது ஆக்கங்களை அனுப்ப விரும்பினாலோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆசிரியர், செங்கோல், தேசிய கிறிஸ்தவ மன்றம், 368/6 பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7.

(வருட சந்தா: ரூபா 100.00)

## பொருளடக்கம்

ஜனவரி - ஏப்ரல் 2002


ஆசிரியரிடமிருந்து 1

ஆயத்துவ மடல் 2

தகவல் எமது உயிர் மூச்சு 5

சமாதானத்துக்கான தூரநோக்கு 6

தேசிய கிறிஸ்தவ மன்ற செய்திகள் 13

இலங்கையில் தேர்தல்கள் 14


**செங்கோல் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வெளியீடு. இதில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகள் ஆக்கங்கள் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை. பிரசுரத்திற்காக சமாதானம், நீதி, மனித உரிமைகள், பற்றிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவை வரவேற்கப்படுகின்றன.**


**ஆலோசனைக் குழு:**

அருட்திரு எபனேசர் ஜோசப்

திருமதி சுபாஷினி பெரேரா

திரு லங்கா நேசையா

அருட்திரு கலாநிதி அ.வி. ஜெபநேசன் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயத்துவ மடல்.....

இன்று நாம் எமது நாட்டின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கடந்த இருபது வருடங்களாக நீடித்துள்ள இந்தப் பயங்கரமான யுத்தம் சகல சமூகத்தவரின் வாழ்க்கையையும் பாதித்துள்ளது. ஆயினும் இதற்கு நேரடியாக முகங்கொடுத்தவர்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்துள்ளனர். துர்அதிர்ஷ்டவசமாக இந்த யுத்தம் எமது நாட்டின் சமூகப், பொருளாதார நிலையை அழித்தது மட்டுமன்றி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதியினையும் பாதித்துள்ளது. இந்தச் சமூகச் சூழலில் தற்போது அரசாங்கத்தினாலும் விடுதலைப்புலிகளினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உளமார வரவேற்கப்படத்தக்கதொன்று என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இந்த இடைக்காலமானது தேசிய வாழ்வு மீண்டும் ஆரம்பிக்க வழிவகுக்கும்.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு நிரந்தர சமாதானம், நல்வாழ்வு மக்கள் சமூகங்களுக்கிடையே ஒப்புரவு என்பதை உருவாக்குவதற்கான கடின மிக்க நீண்ட பயணத்தின் முதற்படியாகவே கருதப்படவேண்டும். பல சந்தர்ப்பங்களும் சவால்களும் நிறைந்த குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள்ளே நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால் ஆக்கபூர்வமாகச் செயலாற்றவேண்டும். இதற்காகத்தான் கடவுள் எம்மை ஆயத்தம் செய்து வைத்துள்ளார். இக்கட்டான காலகட்டமொன்றில் எஸ்தர், கடவுளின் நோக்கத்தை நிறைவேற்ற சந்தர்ப்பம் தரப்பட்டது. அறைகூவல்கள் அவள் முன்னால் வைக்கப்பட்டன. அதே நிலைதான் இன்று நமக்கும்.

மனிதனுடைய பாவத்தின் வெளிப்பாடான பலவிதமான வன்செயல்களையும் எதிர்க்க கிறிஸ்தவ சமூகமாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். யுத்தமே பாவத்தின் மிகக் கொடூரமான வெளிப்பாடு என்பது எமது அனுபவமாகும். இதன் பின்னணியில் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்பட்ட துன்பங்களையும், பாதிப்புக்களையும் விபரிக்க வேண்டிய அவசியமில்லை. இக்கொடூர யுத்தத்தின் விளைவாகக் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்கள் உருக்குலைந்து போனார்கள் என்பது வெள்ளிடை மலை. திருமறையின் அடிப்படையில் வாழும் கிறிஸ்தவர்கள் யாவரும் மிகவும் உறுதியாக யுத்தம் வேண்டாம் என மறுப்புத் தெரிவித்து, சகல விதமான வன்செயல்களிலுமிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதைத் தவிர வேறு மாற்று வழியே இல்லை. யுத்தமும் வன்செயலும் மரணத்தையும் அழிவையுமே ஏற்படுத்துமேயொழிய வேறொன்றையும் ஏற்படுத்தாது. நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடிப்படைப் போதனைகளாகிய 'பரிபூரண வாழ்விற்கு' யுத்தமும் வன்செயல்களும் முரண்பாடாக அமைகின்றன.

எனவே இன்று இலங்கையிலுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் தம் கடந்த வாழ்க்கையைச் சற்றுப் பின்னால் திரும்பிப் பார்த்து அவ்வாறு துணிகரமாக நடந்து கொண்டமைக்காக மன்னிப்புக் கேட்பதுதான் இக்கொடூர யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் ஒரே வழியாகும். இப்பரவலான வன்செயல்களுக்கு நாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்து, சமூகங்களுக்கிடையில் தடைச் சுவர்களை ஏற்படுத்தியுள்ளோம். ஒற்றுமை காண முடியாமல் ஆண்டவர் கூறிய விழுமியங்களுக்கு உறுதியாய் நிற்கத் தவறி, நாம் பல முறையும் மௌனம் சாதித்துள்ளோம். ஆகவே நாம் இந்த முக்கியமான நாளில் எமது ஆண்டவர் எருசலேமுக்குள் பிரவேசித்துச் சிலுவை நோக்கிப் பயணஞ் செய்தபோது பல ஆண்களாலும், பெண்களாலும் சமாதான இளவரசராக ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டார் என்பதை நினைவு கூர்ந்து எமது குறைபாடுகள் தவறுகள் என்பவற்றிற்கு மன்னிப்புக் கோரவேண்டும்.

நாம் சிலுவை மரணத்தை ஏறெடுப்போமானால் மனிதனால் மிகக்கொடூர முறையில் நிறைவேற்றப்பட்ட வன்செயல் மரணம் கிறிஸ்துவின் சிலுவை மரணமாகும். நாம் பரிசுத்த வாரத்துக்குள் பிரவேசித்துள்ளோம். எமது அடிப்படை விசுவாசப் பிரமாணத்தை மீண்டும் உறுதி செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றோம். பாவத்தை முற்றிலும் தோற்கடிக்க கிறிஸ்து தனக்கெதிரான வன்செயல்களையும், சிலுவை மரணத்தையும் பொறுமையுடன் சகித்தார். மனிதரிடையே எழும் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மட்டும் கிறிஸ்து வன்செயல்களை எதிர்க்கவில்லை. மாறாக வன்செயல்களின் விளைவுகளிலிருந்தும் மரணத்தின் பிடியிலிருந்தும் எம்மை மீட்கவே அவ்வாறு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவையிலிருந்து வரும் மன்னிப்பை நாம் பெற்றுக்கொண்டபின் இயேசு கிறிஸ்து நடந்து சென்ற முட்கள் நிறைந்த கடினமான பாதையினூடாகவே நாம் எமது சிலுவையை எடுத்துக் கொண்டுச் செல்ல வேண்டும். எனவே எமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பணி இலகுவானதல்ல என்பதை நாம் உணர வேண்டியவர்களாக உள்ளோம். கிறிஸ்து சகல மக்களையும் ஒப்புரவாக்கிய சிலுவையானது சகல தடைகளையும் வேற்றுமைகளையும் தகர்த்துவிட்டது. நாம் சமாதானம் செய்பவர்களாகவும் ஒப்புரவாக்கும் முகவர்களாகவும் இயங்க அழைக்கப்பட்டுள்ளோம். குறிப்பாக இந்த சந்தர்ப்பத்தில் சரியான வழியில் சமாதான இனவரசருக்குச் சாட்சியாக விளங்க இந்த இடைவெளி எமக்குத் தரப்பட்டுள்ளது. ஒப்புரவாக்கும் இறைபணி விலை செலுத்தவேண்டிய தொன்றாகும். அத்துடன் ஆபத்தானதும் கூட. நாம் பிறரால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவோம். ஆனால் கிறிஸ்தவ சமூகமாகிய எமக்கு வேறு வழியே இல்லை. பிளவுகள் நிறைந்த இரு பிரிவுகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அது தோல்வியோ வெற்றியோ அடைந்தாலும் நாம் யுத்தத்துக்கு எதிராக குரல் எழுப்பி, எல்லாவிதமான வன்செயல்களுக்கு எதிராகவும் மறுப்புத் தெரிவிக்கவேண்டியவர்களாக உள்ளோம். பேச்சுவார்த்தைகள் வெற்றியடையாது போனாலும் கூட யுத்தம் மீண்டும் தலைதூக்கா வண்ணம் நாம் எம்மாலானதைச் செய்ய வேண்டும். இந்த அவசரமான கடவுளால் உறுதிசெய்யப்பட்ட பணியை கீழ்க்காணும் தரிசனப் பிரகடனம் உறுதி செய்கின்றது. இது இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திருச்சபைகளாலும், திருச்சபை ஒருமைப்பாட்டு நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரிசனமாகும்.

மனித கௌரவம், சமத்துவம், நீதி என்பன ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்கும் முகமாக அனைத்து சமய, சமய சார்பற்ற அரசியல் இனத்துவ சமூகங்களும் ஒப்புரவுடனான உறவை தமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதையடைவதற்கு யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் சகல வெளிப்படையான நிறுவனமயமாக்கப்பட்ட வன்செயல்களும் நிறுத்தப்படவேண்டும். ஏற்கனவே இப்பணியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ சமூகம், தனது இறைவாக்குரைப்பு ஆயத்துவப்பணியை ஒன்றிப்புடன் தொடர அழைக்கப்படுகின்றனர்.

இந்நாட்டிலுள்ள சகல பிரஜைகளின் உரிமைகளும் மதிக்கப்பட இறையரசின் விழுமியங்கள் தொடர்ந்தும் காக்கப்பட நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். சத்தியத்தை நாம் எப்பொழுதும் பேசவேண்டும். ஏனெனில் சத்தியமே எம்மை விடுதலை செய்யும். எனவே ஒரே விசுவாச சமூகமாகிய நாம் இதற்கான விலையைச் செலுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

திருச்சபையும் கடவுளின் மக்களும் பாடுபடும் மக்களின் வேதனைகளோடு ஒன்றிக்க வேண்டும். கடவுள் தந்த வளங்களை சுயநலமாய்ப் பாவித்துக்கொண்டு, போலிப் பாதுகாப்புத் தரும் சொகுசுகளையும் சந்தர்ப்பங்களையும் எமதாக்கிக்கொண்டு நாம் நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றோம். எனவே நாம் இதுகாறும் கட்டிக்காத்த இப்போலி வேடத்தைக் களைந்து துன்பப்படுபவர்களுக்காகக் குரல் கொடுப்போம். துயரப்படுபவர்களுடன் நாம் எம்மை இணைத்துக்கொண்டாலொழிய அவர்களுக்காகக் குரல் கொடுக்க இயலாது. எமக்கிருக்கும் மேலதிகமானவற்றையல்ல எம்மையொறுத்து நாம் துன்பப்படுமளவிற்கு பிறருக்குக் கொடுக்க வேண்டும். நாம் மிக விரும்புவனவற்றையே பிறருடன் பகிர்ந்துக் கொள்ளவேண்டும்.

ஏனைய சமூகங்களின் நலன்களை சாதி, மத, இன பேதமின்றி நாம் தேடவேண்டும். விசேடமாக சிறுபான்மை இனத்தவர்களாகிய முஸ்லிம், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், பரங்கியர், செட்டி இனம், மலாய்காரர்கள் இவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும். மொழி, மதம் ஆகிய இரண்டு எல்லைகளையும் தாண்டி, இந்நாட்டு மக்கள் யாவருடனும் இணைந்து பணியாற்றவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சகல திருச்சபைக் கோட்பாடுகளின் தடைகளையும் கடந்து கிறிஸ்தவ சமூகம் ஒன்றிணைந்து சாட்சியாகச் செயற்படவேண்டும்.

எனவே எம்முன் வைக்கப்பட்டுள்ள இப்பணியைச் செய்யக் கடவுளின் ஆவி மட்டும் எமக்கு வல்லமையைத் தரமுடியும். ஆகவே திருச்சபையார் யாவரும் சோர்ந்து போகாமல் தொடர்ந்து இதற்காகப் பிரார்த்தனை செய்யும்படி நாம் கேட்டுக் கொள்ளுகின்றோம். நாம் வாழும் இடங்களிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களிடையே சிறிய அளவிலாவது ஒப்புரவாக்கும் பணியினைச் செய்ய முன்வருவோம். ஒவ்வொருவரும் தாம் வாழும் இடங்களில் வன்செயல்களோ சமாதானத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளோ இடம்பெறுகின்றனவா எனக் கவனித்து விழிப்புடன் இருத்தல் அவசியம். சமாதானத்தையும் ஒப்புரவாக்குதலையும் கட்டியெழுப்ப யாவரையும் தொண்டர்களாகப் பணிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஆகவே இம்முக்கிய கட்டத்தில் எமக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்ற கடவுளின் வழிநடத்துதலையும், ஆவியானவரின் அருட்பொழிவையும் நாடிப் பிரார்த்தனை செய்வோமாக.

அருட் திரு. ஜோர்ஜ் ஸ்டீபன், தலைவர் - இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றம், தலைவர் - இலங்கைப் பிரஸ்பிடேறியன் திருச்சபை.

அதிவணக்கத்திற்குரிய கனம் டுலீப். சிக்கேரா, கொழும்பு பேராயர் இலங்கைத் திருச்சபை

அதிவணக்கத்திற்குரிய கனம் குமார இலங்கசிங்க, குருணாகல் பேராயர், இலங்கை திருச்சபை

அதிவணக்கத்திற்குரிய கனம் கலாநிதி ஜெபநேசன், யாழ்ப்பாண பேராயர்.

கனம் அருட் திரு. நோயல் பர்ணாந்து, தலைவர், மெதடிஸ்த திருச்சபை.

கனம். அருட் திரு. கிங்ஸ்லி பெரேரா, பதில் தலைவர், இலங்கை பப்டிஸ்ட் திருச்சபை.

கனம் அருட் திரு. சி. என். ஜான்ஸ், தலைவர், ஒல்லாந்த சீர்திருத்தச் சபை.

கோர்னல். கலாநிதி. பிரையன். ரக், எல்லைத் தளபதி இரட்சண்ய சேனை.



## எமது குழந்தைகளுக்கான சமாதான யோசனைகள்




- ஆரோக்கியம், பரிபூரணம் என்பவை பற்றிய உணர்வுகள் எமது குழந்தைகளின் மனங்களில் எழுவதற்கான வீட்டுச் சூழலை ஏற்படுத்துங்கள்.
- குழந்தைகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான அனுபவங்களைப் பெற உதவுங்கள்.
- யுத்தத்துடன் தொடர்பு கொண்ட விளையாட்டுப் பொருட்களை விலைக்கு வாங்காதீர்கள்.
- வன் செயல்கள், வீர ஆவேசங்கள் பற்றிய நிகழ்ச்சிகளில் இருந்தும் விலகி நில்லுங்கள்.
- குழந்தைகளிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் இருக்க வழி செய்யுங்கள்.
- யுத்தம், சமாதானம் என்பவை பற்றிப் பேசுங்கள்.
- அந்நியோன்ய உறவுக்கு வழி வகுக்கும் விளையாட்டுகளுக்காகத் தூண்டுங்கள்.
- மனித நேயமிக்க கதைகளைக் கற்றுக் கொடுங்கள்.
- சிந்தனையை வளர்க்க உதவுங்கள்.
- சுயாதீனத்திற்காகத் தூண்டுங்கள்.
- வீட்டில் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- மற்றைய சமாதானச் செயற்பாட்டாளர்களோடு இருக்கும் அந்நியோன்னிய உறவைப் பலப்படுத்துங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் எமது உயிர் மூச்சு

- மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் -



ஜனநாயகத்தின் உயிர் மூச்சு தகவல்கள்தான். தமது சமூகத்தில் நடைபெறுவதை மக்கள் அறிய முடியாமல் அவர்களை நிர்வகிப்பவர்களின் நடவடிக்கைகள் மூடி மறைக்கப்படுமாயின், மக்களால் அந்த சமூகத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியாமல் போகும்.

தகவல்கள் மக்களின் தேவை மாத்திரமின்றி நேர்த்தியான அரசாங்கமொன்றின் அத்தியாவசிய பண்புமாகும். மோசமான அரசுகளுக்கு தமது இருப்புக்காக வேண்டியே இரகசியம் தேவைப்படும். முறைகேடு, வீண்விரயம், ஊழல் என்பவற்றுக்கு இது வழிவகுக்கும்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டு அதற்குச் சமாந்திரமான சுதந்திர வெகுஜன தொடர்பு ஊடகங்களைக்கொண்ட ஒரு நாடு தவறுகளால் அழிந்ததில்லை என்கிறார் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென். தகவல் தெரிந்து கொள்ளும் சுதந்திரம் அரசாங்கத்தின் செயற்பாட்டை பரிசோதிக்கும் வாய்ப்பை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கிறது. அத்தோடு அந்த செயற்பாடு குறித்த விவாதத்துக்கான அடிப்படையையும் அது வழங்குகிறது.

எவ்வாறெனினும் அதிகமான அரசுகள் இரகசியமான முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவே கூடுதல் ஆர்வம் காட்டுகின்றன. சுவரி மொழியில் அரசு என்பதைக் குறிக்கும் சொல்லொன்று கடும் இரகசியம் என்ற அர்த்தத்தை வழங்குகின்றது. ஜனநாயக அரசுகள் கூட தமது செயற்பாட்டின் பெரும்பகுதியை மக்களின் கண்களுக்கு மறைத்தே செய்கின்றன. அவ்வாறு இரகசியமாக செயற்படுவதற்காக அந்த அரசுகள் பல்வேறு காரணங்களையும் தேடிக்கொள்கின்றன. தேசிய பாதுகாப்புக்காக, மக்கள் நலனுக்காக, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக போன்றன அந்த காரணங்களில் சிலவாகும். உத்தியோகபூர்வ தகவல்கள் உண்மையில் மக்கள் சொத்துக்களாகும். ஆனால் அநேகமான அரசுகள் அவற்றை ஆட்சியாளர்களின் சொத்துக்களைப் போன்றே பாதுகாக்கின்றன.

அதிகார துஷ்பிரயோகம் என்பது அரசியல், சமூக கலாச்சார சீரழிவு, ஊழல், உறவினர்களுக்கான அதிகபட்ச சலுகை, சட்டத்தின் மேலாதிக்க வீழ்ச்சி போன்றவற்றின் ஊற்று. மக்களுக்கு அரச நிர்வாகத்தின் செயற்பாட்டை வெளிப்படையாக தெரிந்துகொள்ள ஏற்பாடு இல்லாமை அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு பிரதானமாக வழியேற்படுத்துகிறது. எந்தவொரு சமூகத்திலும் இடம் பெறும் இத்தகைய அழிவுச்செயற்பாடுகளை தடுக்கக்கூடிய அறிவுள்ள மக்கள் தோன்றுவது சுதந்திரமாக தகவல்களை பெற்றுக்கொள்ள வசதியிருக்கும் ஒரு சூழலில்தான்.

ஜனநாயக சமூகம் எனும்போது தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை அதன் அடிப்படை நிபந்தனையாகும் வாழ்வதற்கு காற்று, நீர், உணவு என்பன எவ்வாறு அவசியமாகிறதோ அதேபோன்று நேரடியான ஜனநாயக சமூகத்துக்கு தகவல்கள் அவசியம். தகவல் தெரிந்துக்கொள்ளும் உரிமையும் தற்போது சமூக உரிமையாகவே கருதப்படுகின்றது. உண்மையில் தகவல் பெறும் உரிமை வெளியீட்டுச் சுதந்திரத்தின் ஓர் அங்கம் மாத்திரம்தான்.

தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை இந்த நாட்டில் அரைகுறையாகவே இருக்கின்றது. அந்த உரிமையை உத்தரவாதப்படுத்தும் சட்டமூலமெதுவும் இலங்கையில் இல்லை. உலகின் ஜனநாயக நிர்வாகங்கள் பலவற்றில் தகவல் பெறும் உரிமை சட்ட ரீதியில் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளது. அவ்வாறானதொரு சட்டம் அவசியமென்று 1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னனி ஏற்றுக்கொண்டது. அதற்கான பூர்வாங்க சட்ட மூலமும் தயாரிக்கப்பட்டது. அதற்கப்பால் எந்த முன்னேற்றமும் நிகழவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானத்துக்கான தூரநோக்கு

### திடநம்பிக்கையின் தொனி பகுப்பாய்வும் பிரதிபலிப்பும்
### பாகிஸ்தானில் ஆப்கான் யுத்தத்தின் சிதறல்


*– கிளமென் ஜோன் –*

(மனித உரிமைகளுக்கான நிகழ்ச்சித்திட்ட நடாத்துனர்
ஆசியா, பசுபிக் டபிள்யூ.சீ.சீ.சர்வதேச உறவுகள் குழு)


செய்தியின் பின்னணியில்

வெற்றியாளர்களாக இருந்து அடங்கிப்போன அகதிகள்

ஆப்கானியர்கள் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து தாங்கள் இந்தியாவுக்குச் செல்லும் வழியில் வட-மேற்கு எல்லை மாகாணத்திலுள்ள மலைகளை திரும்பத் திரும்ப கடந்து சென்றுள்ளனர். அவர்கள் வெற்றியாளர்களாக அவ்வாறு சென்றார்கள். கில்ஜி, சூர், லோதி ஆகிய ஆப்கானிஸ்தானின் கோத்திரக் குழுக்கள் வெற்றியடைந்து தங்களது அதிகாரம் மற்றும் ஆட்சியை டெல்லியைத் தளமாகக் கொண்டு உபகண்டத்தின் பெரும் பகுதியை ஆட்சி செய்தனர். வடக்கிலிருந்து உபகண்டத்துக்குப் படையெடுப்புச் செய்தவர்களுள் ஒருவர் மொகலாய சாம்ராஜ்யத்தின் தாபகரான ஜாிறுத்தீன் மும்மட் பாபுர் என்பவராகும். இவர் இறுதியான வெற்றியை அடைவதற்கு முன்னர் தனது தலைநகரான காபூலில் இருந்து 'லோதி'யினால் ஆளப்படும் 'பஞ்சாப்' புக்குப் பலமுறை படையெடுப்புச் செய்த சக்கதாய் துருக்கிய ஆட்சியாளராவர். கடந்த சகாப்தத்தின் பெருமைக்குரிய மரபு ஆப்கானியரின் மனதில் பதிந்துள்ளது. எனினும் அது எதிரிடையான பொருள் பொதிந்தது. கடந்த மூன்று தசாப்தங்களில், தங்களது நாட்டில் மோதல் ஏற்பட்டதன் பின்பு ஆப்கானியர்கள் இரண்டு முறை வெற்றியாளர்களாகவன்றி அகதிகளாக வடமேற்கு எல்லை மாகாணத்துக்கு இடம்பெயர்ந்தனர்.

முதன்முறையாக 1979 இல் அப்போதைய சோவியத் யூனியனின் படையெடுப்பின் போது தப்பிச் சென்றனர்.

இப்போது 2001 இல் தங்களது முன்னை நாள் நம்பிக்கையாளரும் நண்பருமான ஐக்கிய அமெரிக்காவின் சீற்றத்திலிருந்து தப்பிச் செல்லவேண்டியுள்ளது. நிரந்தரமான நண்பர்களோ, தோழர்களோ இல்லாமல் நிரந்தரமான அக்கறைகள் மட்டுமே காணப்படுகின்ற சர்வதேச அதிகார அரசியலுக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். செம்படையை விரட்டியடிப்பதற்கான தங்களது முயற்சியில் தற்போதைய ஆப்கானிஸ்தான் குழப்பத்துக்குப் பங்களிப்புச் செய்த ஐக்கிய அமெரிக்கா, பாகிஸ்தான், சவூதி அரேபியா ஆகிய 3 நாடுகளும் அதனை ஒழிக்க வேண்டிய நிலைக்குள்ளாகியிருப்பது தற்செயலானதாகும்.

ஆப்கானிஸ்தான் மக்களின் வரலாறு யுத்தங்கள், வர்த்தகம், சமயம், இனம் போன்ற வழிகளில் உபகண்டத்தைச் சேர்ந்த மக்களின் வரலாற்றுடன் சிக்கலான தொடர்பைக் கொண்டது. 'ஆப்கான்' என்ற சொல் முதன் முதலாக கி.பி 10 ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டதாகவும் அதன் வேர்ச்சொல் சமஸ்கிருத மொழியிலிருந்து வந்ததாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அதன் பொருள் 'உயர்ந்த நாடு' என்பதாகும். நிலஞ்சூழ்ந்த அந்நாட்டு மக்கள் 19 ஆம் நூற்றாண்டு வரை ஆப்கான் தேசத்தவர் என்பதைவிட தாங்கள் சார்ந்த கோத்திரத் துடன் தொடர்புபடுத்தியே தங்களை இனம் காட்டினர். அந்நாடு ஆப்கான்களின் சபையினால் ஆளப்பட்டதால் 'ஆப்கானிஸ்தான்' என்னும் பதம் பாரசீக மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில எழுத்தாளர்களால் புனையப்பட்டது.

## 1970 கள், மீள் தரிசனம்


1970 களின் பிற்பகுதியில் 'நிஸாம் ஏ முஸ் தபா'வை (திருத்தூதரின்ஆட்சி) அறிமுகப்படுத்தித்தாபிக்க வேண்டுமெனக் கோரி இஸ்லாமியக் குழுக்களின் தலை மையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய வீதி ஆர்ப்பாட்டங்களின் விளைவாக தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதமர் ஸுல்பிகார் அலி பூட்டோவின் அரசாங்கத்தை ஜெனரல் ஸியா-உல்-க் கவிழ் த்தார். தான் ஒரு பயபக்தியுள்ள முஸ்லிமாக இருந்ததால் தனது இராணுவ ஆட்சிக்கு சட்டப்படியான அந்தஸ்து வழங்குவதற்கு சமயக்குழுக்களின் கோரிக்கையை அவர் பயன்படுத்தினார். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது அந்நாடு உட்பட்டிருந்த மோசமான சூழ்நிலையை உணரவில்லை. கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம், அதிகரி த்தகடன்கள், பாரிய சென்மதிநிலுவைப் பற்றாக்குறைகள் என்பவற்றினால் பொருளா தாரம் வீழ்ச்சியுறும் நிலையில் இருந்தது. அதன் அணுவாயுத குறிக்கோள் காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் கடுமையான கண்டனத்தின் கீழ் 'சிமிங்டன் திருத்தம்' எனப்படும் காங்கிரஸின் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் உட்பட்டது. இராணுவ ஒத்து ழைப்பு இடைநிறுத்தப்பட்டதுடன் ஆயுத வழங்கலும் நிறுத்தப்பட்டது. பாகிஸ்தான் அமெரிக்கா உறவுகளில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயம் பாகிஸ்தான் ஊடாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கு ஆப்கானிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட போதைப் பொருட்கள் அனுப்பப்பட்டமையாகும். சர்ச்சைக்குரிய நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் 1979 ஏப்ரல் 04 இல் ஸுல்பிகார் அலி பூட்டோ இராணுவ ஆட்சியினால் தூக்கிலிடப்பட்டார். உலகத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்த போதிலும் ஜெனரல் ஸியா-உல்-க் தயவு காட்டுவதற்கு மறுத்தார். இத்தகைய விடயங்களின் பயனாக இராணுவ ஆட்சி தனிமைப்படுத்தப்பட்டதுடன் ஜெனரல் ஸியா சர்வதேச சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட ஒருவராகக் கணிக்கப்பட்டார்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து இடம்பெற்ற மூன்றாவது இராணுவத் தலையீட்டை வெற்றி கொள்வதற்கு பாகிஸ்தான் முயன்று கொண்டிருக்கும் போது நாட்டில் பரந்த அளவிலான சமூக-பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஆப்கானிஸ்தானின் இடதுசாரி அரசியல் கட்சிகள் முயற்சித்ததால் அச்சுறுத்தல்மிக்க ஒரு கிளர்ச்சியை அந்நாடு எதிர்நோக்கியது. இந்தச் சீர்திருத்தங்களை மார்க்க அறிஞர்களும் கிராமியப் பிரதேசங்களில் இருந்த நிலச்சுவாந்தர்களும் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். 1978 ஏப்ரலில் நடைபெற்ற சவுர் புரட்சிக்குச் சற்றுப் பின்னர் ஆரம்பமான எதிர்ப்புரட்சிக்காரர்களின் ஆயுதத்தாக்குதலை தவிர்ப்பதற்காக ஆப்கானிஸ்தான் மக்கள் ஜனநாயகக் கட்சியின் (PDPA) பிரதானியின் அழைப்பின் பிரகாரம் முன்னைய சோவியத் யூனியனின் இராணுவப் படைகள் 1979 டிசம்பர் 27 இல் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தபோது பாகிஸ்தானின் நிலை முற்றிலும் மாறியது.

ரஷ்ய தலையீட்டை உடனடுத்து ஆப்கானிஸ்தானின் நிகழ்வுகளை அவதானித்த ஜனாதிபதி காட்டரின் தேசிய பாதுகாப்பு பற்றிய ஆலோசகரான திரு. ஸ்பிக்நியூ பிர்ஸசிங்கி (Zbigniew Brzezinki) 1980 பெப்ரவரியில் பாகிஸ்தானுக்கு வருகை தந்தார். சீ.ஐ.ஏ ஊடாக முஜாஹிதீன்களுக்கு (புனிதப் போர்வீரர்கள்) மறைமுகமான உதவி வழங்குவதற்குத் தனது அரசாங்கத்தின் சம்மதத்தையும் "டொலருக்கு டொலர்" பொருத்தத்துக்கு இணங்குகின்ற சவூதி அரேபியாவின் நிதி உதவி வழங்குவதற்கான வாக்குறுதியையும் பெற்று ரஷ்யர்களை எதிர்த்துப் போராடுவதற்கான திட்டமொன்றுடன் அவர் வந்தார். சீ.ஐ.ஏ யின் மறைமுகமான உதவி மற்றும் ஆதரவுடன் பாகிஸ்தானின் 'இன்ரர் சேவிஸ் இன்டரெலிஜன்ஸ் ஐ.எஸ்.ஐ ஊடாக எல்லா ஆயுத, நிதி வழங்கல் மற்றும் போர் வீரர்களுக்கான பயிற்சி வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆப்கான் முஜாஹிதீன்களுக்காக பெரும்பாலும் சோவிய த்தில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை ஏற்றிய விமானங்கள் எகிப்து மற்றும் இஸ்ரேலிலிருந்து துறைமுக நகரமான கராச்சியை வந்தடைந்தன.

பாகிஸ்தானில் வழக்கமாக நடைபெறுவது போன்று அவற்றில் ஒரு பகுதி ஐ.எஸ்.ஐ யினால் பதுக்கப்பட்டு கறுப்புச் சந்தைக்கு விடப்பட்டது. அந்த ஆயுதங்கள் பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்லாமியக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. இந்த குழுக்கள் சீ.ஐ.ஏ மற்றும் ஐ.எஸ்.ஐ என்பவற்றின் துணையுடன் சோவியத் நாட்டவரை ஆப்கானி ஸ்தானிலிருந்து விரட்டியடிப்பதில் முக்கியத்துவம் வகித்தன. பாகிஸ்தானிலுள்ள அகதிமுகாம்கள் முஜாரிதீன்களைத் தேர்ந் தெடுப்பதற்கான நிலையங்களாகத் திகழ்ந்தன. புரட்சிகர இஸ்லாமியக் கட்சிகள் முதல் ஆயுதங்கள், போதைப் பொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களை விற்பனை செய்து இலாபமீட்டுவோர் வரையான விரோத அக்க றையுள்ள குழுக்கள் பல்லாண்டு காலமாக இருந்து வந்த அரசப் பற்றுறுதி, பழக்க வழக்கங்கள் என்பவற்றை சவாலிட்டுக் கொண்டு ஓரிரவுக்குள் தோற்றம் பெற்றன. மேற்கத்திய நாடுகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த குல்பெதின்க்மதாயார் என்பவரின் தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவத்தின் ஆப்கான் கிளையான ஸ்பே இஸ்லாமி போன்ற கட்சிகள் கோத்திர பிராந்திய இனப்பிணைப்புகளை விஞ்சுகின்ற பற்றுதலை ஏற்படுத்திக் கொள்வதற்காக கோட்பாடு, ஆயுத வழங்கல் என்பவற்றைப் பயன்படுத்தின. 'கிளாசின்கோவ்ஸ்' இல் கூடுகின்ற பருவ வயது இளைஞர்கள் வெள்ளைத் தாடியைக் கொண்ட முதியோர்களால் முகாம்களின் அதி உயர் உள்ளூர் அதிகாரிகளாகப் பதிலீடு செய்யப்பட்டனர். ஜீகாத் எனப்படும் இஸ்லா மிய எண்ணக்கரு பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரான போராட்டம் பல முல்லாக்களை அவர்கள் அறிந்திராத அரசியல் பங்கேற்புக்குள் தள்ளியது.

ஆப்கானிஸ்தான் யுத்தத்துக்கு மனிதவலுவை வழங்கிய மற்றுமொரு தோற்றுவாய் ஆப்கானி ஸ்தானுடனான எல்லை நெடுகிலும் தோன்றியிருந்த மத்ரசாக்கள் (சமயப் பாடசாலைகள்) ஆகும். சவூதி அரேபிய தனிநபர்களாலும் குழுக்களாலும் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளாலும் நிதியிடப்பட்ட இப்பாடசாலைகள் தலிபான்களின் தோற்றத்துக்குக் காரணமான குறிப்பிட்ட இஸ்லாமிய சீர்திருத்த வகை ஒன்றுக்கு பங்களிப்புச் செய்தது. சவூதியைச் சேர்ந்தவர்கள் உலகெங்கும் உள்ள அடிப்படை இஸ்லாமியக் குழுக்களுக்கு நிதியிட்டுள்ளனர். ஆனால் தமது எல்லைக்குள் போராட்டப்போக்கைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டனர். இந்தக் குழுக்களுக்கு நிதி வழங்குவதற்கு தீர்மானித்தனை சவுதி அரேபியாவை மிகுந்த பரிசீலனைக்கு உட்படுத்தும் சோவியத் படைகளை எதிர்த்துப் போராடுவதற்கான ஜிகாத் படையில் அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முகாம்கள் அமைக்கப்பட்டு சீ.ஐ.ஏ மற்றும் ஐ.எஸ்.ஐ ஆளணியினரால் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. இதன் பயனாக குறுகிய காலத்துக்குள் ஆப்கானி ஸ்தானும் பாகிஸ்தானும் அனைத்து இஸ்லாமிய நிலையமாகத் திகழ்ந்தன. ஆப்கான் யுத்தத்தினால் கொண்டுவரப்பட்ட அனைத்து இஸ்லாமியவாதம் வளங்கள், தகவல் மற்றும் ஆணையினரை பகிர்ந்து, பரிமாற்றம் செய்யும் வலையமைப்பினால் நிதி, க்லாச்சார, அரசியல் விடயங்களில் அது கணிசமான அளவு வளர்ந்தது. ஜிகாத்தில் பல்தேசிய ஈடுபாடு காஷ்மீரை விடுவிப்பதற்கு ஆயுதப் போராட்டமொன்றுக்கு வெளிப்படை யாகப் பரிந்துரைத்த மரபு ரீதியான சமயக் கட்சிகளை இராணுவமயப்படுத்தியது. இஸ்லாமிய முற்போக்குக் கோட்பாடு சவூதி அரேபியா உள்ளிட்டவெளி சக்திகளின் தீவிரமான உதவியுடன் ஜெனரல் ஸியாவின் பதினொரு வருட இராணுவ ஆட்சியின்போது பேணி வளர்க்கப்பட்ட இஸ்லாமிய முற்போக்குக் கோட்பாடு நிறுவப்பட்டது. அதன் பயனாக பாகிஸ்தானின் சமூகம் சுன்னிகள், சீயாக்கள் போன்ற உட்குழுக் களாகப் பிளவுபட்டது. முன்னைய சோவியத் யூனியனின் வீழ்ச்சி, ஆப்கானிஸ்தானிலிருந்த அதன் படைகள் பின்வாங்கிமை என்பன அதன் அரசியல், இராணுவ நடவடிக்கைகளின் எழுச்சியில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அது ஆப்கானிஸ்தானின் பல்வேறு குழுக்க ளிடையே இரண்டாம் சுற்றுப் போட்டி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப் போராட்டத்துக்கு இட்டுச்சென்றது. இவ்வேளையில் சோவியத் வீரர்கள் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறியதைக் கண்ணுற்ற அமெரிக்கா, ஆர்வம் இழந்து பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ, தலிபான் என்பன தங்களைத் தாங்களே பாதுகாக்குமாறு கைவிட்டு அதன் இராணுவ மற்றும் பொருளாதார ஆதரவை பின்வாங்கிக்கொண்டது. சவூதி பாகிஸ்தானுடன் சேர்ந்து தொடர்ந்தும் தலிபானுக்கு ஆதரவு நல்கியது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியான காரணங்களுக்காகவே ஆதரவளித்தது. தனது வடக்குப் புறத்தில் நேச அரசாங்கம் விரும்பிய இந்தியாவுக்கெதிராக போர்த் தந்திரத்திட்டம் ஒன்று பாகிஸ்தானுக்குத் தேவையாக இருந்தது. ஆப்கானிஸ்தானில் ஈரானின் சீயா செல்வாக்குக்கு எதிராக சவூதி அரேபியா தலிபான்கள் ஊடாக தங்களது இஸ்லாமிய கொள்கையை ஆதரித்து மேம் படுத்தியது.

பொதுவான நோக்கமும் இராணுவத்தில் கவனத்தையும் கொண்ட பாகிஸ்தானின் சமயத்தீவிரவாதக்கட்சிகள் ஆப்கானிஸ்தான் மற்றும் காஷ்மீர் தொடர்பாக யுத்தக் கொள்கையைக் கடைப்பிடித்தன. பிராந்தியத்தில் சமூகத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் அவர்கள் தடுத்தனர். இக்கட்சிகள் வாக்கெடுப்பில் நிராகரிக்கப்பட்ட போதிலும் பாகிஸ்தானின் அரசியலில் மிகுந்த பங்கு வகித்தன. உட்குழு மற்றும் சுயநலப் பிரிவினைகளுக்குள் சிக்கியுள்ளதும் சமயத்தின் பேரில் வன்முறையை ஏற்படுத்திக்கொண்ட பாகிஸ்தானின் சமூகத்தின் இராணுவமயமாக்கத்துக்கு அவை பங்களிப்புச் செய்துள்ளன.

ஆப்கான் யுத்தம் மற்றும் காஷ்மீரில் ஜிகாத் என்பன சமயத் தீவிர வாதிகளின் கைகளைப் பலப்படுத்தியதோடு மட்டுமன்றி அவர்களை கருத்துத் தெரிவிப்ப வர்களாகவும் வன்முறையாளர்களாகவும் ஆக்கியுள்ளது.


## செப்டம்பர் 2001

1979 டிசம்பரில் இருந்த சூழ்நிலையைப் போன்றே பாகிஸ்தான் மீண்டுமொருமுறை இராணுவ ஆட்சியின் கீழ் உள்ளது. இம்முறை பேவஸ் முஷர்ரப்பின் கீழ் அது உள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் சூழ்நிலை ஒரேமாதிரியானதே, எல்லா அரசியல் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரம் மோசமாக உள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் இல்லாதொழிந்துள்ளன. அத்துடன் அதிகரித்த கடன் சுமையும் காணப்படுகின்றது. 1998, மே மாதம் மேற்கொள்ளப்பட்ட அணுவாயுதப் பரிசோதனை காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான சர்வதேச சமூகத்தினால் விடுக்கப்பட்ட தடைகள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

சமயம் தொடர்பான சகியாமை அதிகரித்த வண்ணம் உள்ளது. போரிடுகின்ற சுன்னி மற்றும் ஸீயா பிரிவுகளுக்கிடையிலான உட்கட்சிக் கொலைகள் நாளாந்த நிகழ்வுளாகக் காணப்படுகின்றன. போராட்ட இஸ்லாமியக் குழுக்கள் காஸ்மீர் மற்றும் ஆப்கானிஸ்தான் ஜிகாதுக்காக அன்பளிப்புகளைச் சேகரிப்ப தற்குப் புறம்பாக அந்நோக்கத்துக்காக வெளிப்படையாகத் தொண்டர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்றன. அவை தற்போது பாகிஸ்தானில் மிகப்பெரும் தொழில் வழங்குனர்களாகக் காணப்படுகின்றன.

புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூபா ஆயிரத்து ஐந்நூறு செலுத்தப்படுகின்றது. ஆட்சியானது தனிமைப்படுத்தப்பட்ட போதிலும் காஸ்மீர் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடைமுறைக்கு மாறான யுத்தக் கொள்கைகளைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றது. காஷ்மீரில் இந்தியாவை இரத்தம் சிந்தச் செய்வதில் குறைவான தீவிரமுள்ள முரண்பாட்டில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. பிராந்தியத்தில் பெருமளவு வாயு மற்றும் எண்ணெய் கையிருப்பைக் கொண்டுள்ள மத்திய ஆசியக் குடியரசுகளை கட்டுப்படுவதற்கும் ஆப்கானிஸ்தானில் வடக்குக்





கூட்டணியை எதிர்த்துப் போராடுவதற்கு தலிபான்களுக்கு ஆதரவளிக் கின்றது. இந்தக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் இராணுவ நிறுவனத் துக்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கிடை யில் பிணைப்பொன்று விருத்தியடைந் துள்ளது. இந்த அபாயகரமான அபிவிருத்தி யைக் கவனத்தில் கொள்ளும் போது பாகிஸ்தான் ஒரு தோல்வியுற்ற அரசாகும் என அந்நாட்டிற்குள்ளும் வெளியிலும் இருக்கின்ற அரசியல் அவதானிகள் அடிக்கடி குறிப்பிட்டுள்ளனர்.

செப்படம்பர் 11 ஆம்திகதி ஐக்கிய அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் பாகிஸ்தானின் சூழ்நிலையில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. பயங்கரவாதத்திற்கெதிரான கூட்ட ணியுடன் சேர்வதற்கான இராணுவ ஆட்சியின் தீர்மானம் அந்நாட்டை தற்போதைய இக்கட்டான நிலையிலிருந்து விடுவித்துள் ளதுடன் இராணுவ மற்றும் பொருளாதார உதவிக்காக புதுப்பிக்கப்பட்ட வாக்குறுதிகளும் வழங்கப்பட்டுள்ளன. தடைகள் நீக்கப்பட்டு ள்ளதுடன் நாடுகளின் கடன் கொடுப்பன வுகளும் மீள்பட்டியலிடப்படுகின்றன. முன்னர் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தலையிட்டு பாகிஸ்தானின் உதவியை நாடியபோது அந்நாடு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாகக் கடமைப்பட்டிருந்தது.

அவ்வேளையில் பாகிஸ்தானுக்கு மூன்று தெரிவுகள் இருந்தன.

1. ஆப்கானின் எதிர்ப்போராட்டத்தில் பங்குவகிப்பதன் மூலம் சோவியத் யூனியனை எதிர்த்தல்
2. சோவியத் யூனியனால் விதிக்கப்பட்ட விதியை உடன்பட்டு ஏற்றுக் கொள்ளுதல்
3. ஐ.நா.வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கட்டளைச் சட்டத்தை மீறியமைக்காக சோவியத் யூனியனுடன் இராணுவ ரீதியாக மோதாமல் அதனை எதிர்த்தல்.

அது (1) ஆம் இலக்க விருப்பையே தெரிவு செய்தது. இம்முறை அது எவ்வாறிருக்கும்? ஜனாதிபதி முஷர்ரப் கூறியுள்ளதன் பிரகாரம் வான்வெளியைப் பயன்படுத்த அனுமதித்தல், கணிப்பியல் திட்டம் சார்ந்த ஆதரவளித்தல் அமெரிக்காவுடன் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறுதல் என்பவற்றைத் தவிர அவருக்கு தகவல்களைப் பரிமாறுதல் என்பவற்றைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. அமெரிக்காவின் குறிக்கோள் என்னவாக இருப்பினும், ஆப்கானிஸ்தானில் அது அடையப் பெற்றதும் என்ன நடக்கும்? மீண்டுமொருமுறை பிரச்சினை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு பாகிஸ்தான் தனித்து விடப்படுமா? முன்னைய தலையீட்டின் பயனாக பேணி வளர்க்கப்பட்ட ஜிாத் குழுக்களுடன் நடவடிக்கை மேற்கொள்வது யார்? ஓசாமா பின்லேடன் மற்றும் தலிபா னுக்கு எதிரான நடவடிக்கை முடிவடைந் தவுடன் புஷ் நிர்வாகம் இவ்விடயத்தில் ஈடுபடுமா? இந்தியாவின் பதில் நடவடிக்கை எவ்வாறு . . ஜிாத் குழுக்களை அது பயங்கரவாதி எனக்கருதுவதுடன் பாகிஸ்தானை பயங்கரவாதிகளுக்கு அபயமளிக்கும் அரசாக பிரகடனப்படுத்துமாறு அமெரிக்காவை அது வலியுறுத்திக் கேட்டுள்ளது. இராணுவ அரசு காஷ்மீரில் ஜிாத் கொள்கையைக் கைவிடுவதுடன் மத்திய ஆசியாவின் நுழைவாயிலைக் கட்டுப்படுத்துகின்ற தனது கனவையும் அது கைவிடுமா? பாகிஸ்தானிலுள்ள 6000 மத்ரஸாக்களின் நிலை என்னவாகும்? பாகிஸ்தானின் கல்வி முறையை சீர்திரு த்துவதற்கு அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் நிதி வழங்குமா? அது கிளிசலாக இருக்கும் வரைக்கும் சமயச் சகிப்பின்மை மற்றும் தீவிரப்பற்று ஆகிய சேற்றில் தொடர்ந்தும் சிக்கித்தவிக்கும்.

பாகிஸ்தானுக்குள் குடிபெயரும் மில்லியன் கணக்கான அகதிகளுக்கு யார் பொறுப்புச் சொல்வது? கடந்தமுறை அது 2.8 மில்லி யனாக இருந்தது. அவற்றுள் பெரும்பா லானவர்கள் திரும்பிச் செல்லவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ நடவடிக்கை முடிவுற்றதும் ஆப்கானிஸ்தானின் புனர் நிர்மாணம் மற்றும் மீள் அபிவிருத்தியைச் சர்வதேசச் சமூகம் பொறுப்பேற்குமா?

## அகதிகள்-அன்றும் இன்றும்

ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தானுக்கான மக்களின் இடப்பெயர்வு எப்போதும், குறிப்பாக குளிர்காலத்தில் நடைபெற்று வருகின்றது. அடிப்படையில் அவர்கள் தங்களது குளிர்காலங்களைப் பாகிஸ்தானில் கழிக்கின்ற கோகிஸ் (நாடோடிகள்) ஆகும். முரண்பாடு ஆரம்பமானது முதல் அவர்கள் திரும்பிச் செல்லவில்லை. 1970 களில் பாகிஸ்தானுக்கு வந்த அகதிகளை இரண்டு வகையினராகப் பிரிக்கலாம்.

1. ஆப்கான் மேல்குடியினர், பெரும் நிலச்சுவாந்தர்கள், சமயத் தலைவர்கள், வர்த்தகர்கள் மற்றும் மத்திய வகுப்புத் தொழில் புரிவோர்.

2. நகர, கிராமிய வறியவர்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்த அகதிகள் பிர்ஸ் (சமயத் தலைவர்கள்) நிலச்சுவாந்தர்கள், கோத்திரத் தலைவர்களுடனான விசுவாசம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக வந்தார்கள். ஏனைய சிலர் பாதுகாப்புப்படையினருக்கும் கலகக்காரர்களுக்குமிடையில் கலவரம் மூண்டபோது நாட்டுப்புறங்களில் நிலவிய ஸ்திரமற்ற நிலைமை காரணமாக வந்தார்கள்.

முதல் வகையினரில் பலர் மேற்கு நாடுகளில் தஞ்சம் கோரினர். ஆனால் பெரும்பான்மையானவர்கள் பாகிஸ்தானில் குடியேறி போக்குவரத்து, சில்லறை வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டனர். பாகிஸ்தானுக்குள் வந்த 2.8 மில்லியன் மக்களில் ஒரு மில்லியன் மக்கள் மட்டுமே திரும்பிச் சென்றனர். ஏனையோர் இடம்பெயர்ந்தனர் அல்லது வடமேற்கு எல்லை மாகாணம், பாகிஸ்தான் மற்றும் கராச்சியில் குடியேறினர்.

இக்குடியேற்றக்காரர்கள் பிராந்தியத்தின் அரசியலை மாற்றி இஸ்லாமிய ஆயுதக்குழுக்களின் பலம் பொருந்திய ஆதரவாளர்களானார்கள். அப்போதிருந்து பாகிஸ்தானை ஆட்கொண்ட ஆயுத மற்றும் போதைப் பொருள் கலாசாரத்தின் அறிமுகத்துக்கும் அவர்களே பொறுப்பு. பிரித்தானியக் குடியேற்றவாதிகள் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள கோத்திர நீள் திட்டை ஆள்வதற்கு முயற்சித்த போது அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவாறு ஆப்கானியர்கள் இறுமாப்புடையவர்கள் என்றும் கீழ்ப்படியாதவர்கள் என்றும் வரலாறு கூறுகின்றது. குர்கா படையணியைக் கட்டுப்படுத்துவது கூட சிரமமாகத் தோன்றவில்லை. ஆப்கானியர்களைக் கட்டுப்ப டுத்துதல் இலகுவான காரியமல்ல என பாகிஸ்தானின் நிறுவனமும் கண்டுபிடித்துள்ளது.

இவ்வேளையில் பாகிஸ்தானுக்கு வருகின்ற அகதிகள் போராளிகளாகவோ அல்லது நகர மற்றும் கிராமிய வறியவர்களாகவோ இருப்பர். மூன்று தசாப்தகால யுத்தம் காரணமாக அவர்களது நாடு முற்றிலும் தகர்க்கப்பட்டு உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்ட நிலையில் அவர்கள் திரும்பிச் செல்வதற்கு எதுவுமே எஞ்சியிருக்காது.

உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பாகிஸ்தானில் வந்து குவிந்த சர்வதேச செய்தி ஊடகங்களின் பரபரப்பெல்லாம் தணிந்து விட்டதன் பின்பு இந்த அகதிகளைப் பற்றிக் கவனம் செலுத்தப்போவது யார்? பிரச்சினையின் பரிமாணத்தைத் தெரிந்து கொண்டு பெருமளவிலான உட்பாய்ச்சலை பாகிஸ்தான் எவ்வாறு கையாளும்? வழக்கமான சோர்வு ஆரம்பிக்கும் வரை, சர்வதேச உதவி நல்கும் முகவர்களின் அக்கறைகள் எவ்வளவு கால் நிலைக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாலயங்களின் பதில் நடவடிக்கை

ஆப்கானிஸ்தானின் முன்னைய நெருக்கடி யின்போது மேற்கத்திய தேவாலய முகவர்கள் மனிதாபிமான நடவடிக்கைகளில் முன்னணி யில் நின்றனர். நெருக்கடியானது பெருந் தொகையான அகதிகள் குடித்தொகையின் உட்பாய்ச்சலை மட்டுமன்றி வெளிநாட்டு நிவாரணப்பணியாளர்களின் உட்பாய்ச்சலையும் கொண்டு வந்தது. அவ்வேளை பாகிஸ்தானிய ஆயர் ஒருவர் ஜெனரல் ஸியாவைப் போன்று பொதுவுடமை வாதிகளை ஆப்கானிஸ்தா னுக்கு வெளியில் அனுப்புவதை மனதிற்கொண்டு முக்கிய பங்காற்றினார். ‘இன்டோர்ஸ்' எனப்படும் பொதுப்படையான கூட்டமைப்பொன்றை அமைப்பதற்கு அவர் பொறுப்பாக இருந்தார்.

நிவாரண நடவடிக்கைகள் தனிப்பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதுடன் உள்நாட்டு தேவாலயங்கள் அவற்றில் சம்பந்தப்பட வில்லை. சில முகவர் ஆளணியினர் ஆப்கான் இஸ்லாமிய உட்கட்சித் தலைவர்களுடன் குறிப்பாக ஸ்பே இஸ்லாமியுடன் தொடர்பை ஏற்படுத்தி எல்லைக்குக் குறுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இப்போது அந்த முகவர்கள் மீண்டும் விரைந்து செல்லத் தயாராகின்றார்கள்.

முன்னைய அனுபவங்க ளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் என்னவென்று சிந்தித்தல் பொருத்தமாகும். உள்ளூர் தேவாலயங்கள் பங்கேற்க வேண்டி நேருமா? அப்பிரதேசத்தில் கடந்த இரு தசாப்தங்களில் மேற்கொண்ட வேலை எமக்கு மிகுந்த அனுபவத்தை அளித்துள்ளது. குறிப்பாக நீண்ட காலம் ஈடுபட வேண்டி யிருப்பின் மேலும் கூட்டான பங்கு பற்றுதலும் பரஸ்பர பொறுப்புமிக்க அணுகுமுறையைக் கொண்டிருத்தல் புத்திசாலித்தனமானதாகலாம். ஆப்கான் யுத்தத்திலிருந்து விலகியிருத்தல் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பாகிஸ்தானிலுள்ள சமயரீதியாக சிறுபான்மையினர் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்ற இஸ்லாமியத் தீவிரவாதத்தின் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுப்படையான பங்காளிகள் தங்களின் நடவடிக்கைகளின்போது உள்நாட்டு தேவாலயங்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் விழிப்புணர்ச்சியளித்தலைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய நடவடிக்கை பெரும்பான்மைச் சமூகத்தின் தப்பெண்ணத்தைப் போக்க உதவுவதுடன் பாகிஸ்தானில் கிறிஸ்தவ சிறுபான்மையினர் மீது நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பவும் உதவும். தற்போதைய நெருக்கடியில் மனிதாபிமான நிவாரண உதவியை மட்டும் வழங்கினால் போதாது. உள்நாட்டு சமூகங்களிடையே இணைப்பை ஏற்படுத்துவதற்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கிடையேயான முழு உலக உறவுகள் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருக்கின்ற வேளையில் தான் பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

.........

## நடந்து கொள்

அன்பு காட்டு~ ஆனால்

அடிமையாகி விடாதே

இரக்கம் காட்டு~ஆனால்

ஏமாந்து போகாதே

கண்டிப்பாய் இரு~ஆனால்

கோபப்படாதே

பணிவாய் இரு~ ஆனால்

கோழையாய் இராதே

சுறுசுறுப்பாய் இரு~ஆனால்

பதட்டப்படாதே

பொருளைத் தேடு~ஆனால்

பேராசைப்படாதே

உழைப்பை நம்பு~ஆனால்

கடவுளை மறந்து விடாதே

அ. றெமில்ரன்,மல்லாவி

நன்றி: ஒளியை நோக்கி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய கிறிஸ்தவ மன்ற செய்திகள்:



## வாலிபர் நிகழ்வு:

திருச்சபைகள் ஒன்றிணைந்த வாலிபர்களுக்கான நிகழ்ச்சி ஒன்று கடந்த மார்ச் 16ம் திகதி அன்று கண்டியிலே நடை பெற்றது. இந் நிகழ்விலே தேசிய கிறிஸ்தவ மன்ற அங்கத்துவ திருச்சபைகள் றோமன் கத்தோலிக்க திருச்சபை புதிய திருச்சபைகளை சேர்ந்த 65 வாலிபர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளின் தொடர்புக்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.







## பயிற்சிப்பட்டறை:

திருச்சபைகளுக்கிடையே அமைதிப் பணியை வளர்க்க ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி பட்டறை பெந்தோட்டையில் ஜனவரி 21-25 வரை நடை பெற்றது. இப்பட்டறையில் தற்போதைய அமைதிப்பணி வளர்ச்சி, அமைதி பணியை வளர்க்க செய்யப்படவேண்டிய பணிகள், திருச்சபைகள் அமைதி பணியில் ஆற்ற வேண்டிய பங்கு ஆகியவை ஆராயப்பட்டது.

கலாநிதி ஜயதேவ உயன்கொட, திரு. றொகான் எதிரிசிங்க, அருட்திரு எபனேசர் ஜோசப், திரு. சம்பந்தர், திரு. சிசிர விஜயசிங்க, பேராசிரியர் ஸ்புள்ளா, திரு. ஜோ வில்லியம்ஸ், பேராயர் டுலீப் சிக்கேரா, கலாநிதி ஸ்டிக் உட்நம் (நோர்வே), அருட் கலாநிதி தொமஸ் நயினான் (இந்தியா) ஆகியோர் கருத்தரங்கு நடத்துனர்களாக பணியாற்றினர். தேசிய கிறிஸ்தவ மன்ற திருச்சபைகளிலிருந்தும், திருச்சபை சார்ந்த நிறுவனங்களிலிருந்தும், றோமன் கத்தோலிக்க திருச்சபைகளிலிருந்தும் பிரதிநிதிகள் இக் கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கில் முன்மொழியப்பட்ட கருத்துக்கள் தேசிய கிறிஸ்தவ மன்ற கூட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டு ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்ட திருச்சபைகளின் நோக்கு பற்றிய அறிக்கை பின்வருமாறு:


“சமய, சமூக, அரசியல், சமய சார்பற்ற குழுக்கள் அனைத்தும் சமாதான நோக்கிற்காக ஒன்றிணைய வேண்டும். இவவாறான அமைப்பினால்தான் மனித மாண்பையும், சமத்துவத்தையும், நீதியையும் ஒருங்கிணைத்த இலங்கையை உருவாக முடியும். இந்நிலையை அடைய யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், வெளிப்படையானதும் ஒழுங்குப்படுத்தப்பட்டதுமான வன்முறை நிறுத்தப்பட்டு நம்பிக்கை, புரிந்துணர்வு வளர வேண்டும். இப்பணியில் இணைந்துள்ள திருச்சபை தொடர்ந்து இறைவாக்குப் பணியும் ஆயத்துவ நோக்கும் கொண்டதாக ஒருங்கிணைப்புடன் செயற்பட வேண்டும்.”

(தொடர்ச்சி 20ம் பக்கம்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தேர்தல்கள்





தேர்தல்கள் பரந்த அளவிலான அறிவுசார் ஆய்வின் கருப் பொருளாகியிருக்கின்றன. இந்தச் செயற்பாட்டை விபரிப்பதற்கு தேர்தல் பற்றிய என்னும் பதம் நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

பிரித்தானியாவில் நவீல்ட் கல்லூரியில் தனியான பொதுத் தேர்தல்கள் தொடர்பான ஒக்ஸ்போட் ஆய்வுத் தொடர்கள் இத்துறையில் பெருமளவுக்குப் பின்பற்றப்படும் முன்னு தாரணமாக அமைந்துள்ளன. இலங்கையில் ஐ.டீ.எஸ் வீரவர்த்தன அவர்களின் ''பொதுத் தேர்தல்கள் 1956'' எ.ஜே.வில்சன் அவர்களின் ''தோற்றம் பெறும் அரசொன்றில் தேர்தல் அரசியல் விஸ்வா வர்ணபால டீ.வோகம ஆகியோரின் ஜனாதிபதித் தேர்தல் 1982 மற்றும் சர்வசனவாக்கெடுப்பு 1982 என்னும் நூல்கள் இலங்கை தொடர்பான முக்கிய தேர்தல் ஆய்வுகளாகும்.

தேர்தல் (Election) எனும் சொல் தெரிந்தெடுத்தல் எனும் கருத்தையுடைய எலிகர் (eligere) என்ற இலத்தின் மொழி வினைச் சொல்லிருந்து பிறந்தது. தேர்தல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுடன் கூடிய ஒரு நடைமுறையா கும். இந்த நடைமுறையில் குடிமக்கள் அனைவரும் அல்லது குடிமக்களில் சிலர், ஒருவரை அல்லது சிலரை பதவி வகிப்பதற்காகத் தெரிவு செய்கின்றனர். நியமனம் அல்லது சீட்டுக்குலுக்குதல் மூலம் மேற்கொள்ளப்படும் மாற்றுத் தெரிவு முறைகளி லிருந்து இது வேறுபட்டது என்பது கருத்திற் கொள்ள ப்பட வேண்டியதாகும்.

வாக்களிப்பு முறை, வாக்குரி மையின் அளவு, தேர்தல் செயன்முறையின் தன்மை என்பன பெருமளவுக்கு வேறுபடுகின்ற போதிலும். தலைவர்களை அல்லது பேராளர்களை அல்லது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடு க்கும் இந்தமுறை அனேகமாக எல்லாச் சமுதா யங்களிலும் ஏதோ ஒரு வடிவத்தில் காணப்படுகின்றது.

சுதந்திரமான தேர்தல் என்பது ஜனநாயக ஆட்சிக்குரிய பிரதான முன் நிபந்தனையாக வுள்ளது. யார் வாக்களிப்பத ற்கு உரித்துடையவராக இருக்க வேண்டும் என்பது தொடர்பான சரியான வரைவி லக்கணம் ஒழுங்கமைக்கப் பட்ட தேர்தலுக்கு அவசியமா னதாகும். ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்காக நடாத்தப் பட்ட பல ஆரம்ப காலப் போராட்டங்கள் வாக்குரிமை விஸ்தரிப்பது தொடர்பானவை யாக அமைந்திருந்தன.

வாக்களிப்பதற்கான சர்வசன உரிமையை அளித்தல் என்பது அதன் முழுமையான பிரயோகத்தினை உத்தரவா தம் செய்யவில்லை. ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 55 வீதமானவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கின்ற னர். தகைமை பெற்ற வாக்காளர்களின் திருத்தமான பட்டியல் என்பது நியாயமான ஒரு தேர்தலுக்கு கிட்டத்தட்ட அவசியமான முன் நிபந்தனை யாகும். இரகசிய வாக்கெடுப்பு என்பது பகிரங்கத் தேர்தல்க ளில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வாக்கெடுப்பு நிலையத்திலும், வாக்குகளை எண்ணும் போதும் மோசடி, பயமுறுத் தல் ஆகியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுதல், தகுதிவாய்ந்த தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் கட்சிகளைச் சார்ந்த கண்காணிப்பாளர்களால் தடுக்கப்படுவதற்குரிய ஒழுங்குகள் நம்பகமான விதத்தில் இரகசிய வாக்கெடுப்பு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆரோக்கியமான தேர்தல் என்பது நீதியானதும் திறமையானதுமான நிர்வாக வேலைகளில் மட்டுமன்றி வேறுபலவிடயங்களின் மீதும் தங்கியுள்ளது. நியாயமான ஒரு களத்தில் உண்மை ஜெயிக்க வேண்டுமானால், விவாதங்கள் நியாயமான அளவு சமமான அடிப்படை களில் நடாத்தப்பட வேண்டும்.

அனேகமான ஜனநாயக நாடுகளில் தொலைக்காட்சி வானொலிச் செய்தியறிக்கை கள் என்பவற்றில் மேற்கொள் ளப்படும் கட்சிப் பிரசாரங்க ளும் மற்றும் கட்சிச் செய்தி களை வெளியிடுவதற்கும் நேர்காணல்களிலும், விவாதங் களிலும் பங்குபற்றுவதற்கும் இந்த ஊடகங்களைப் பயன் படுத்துவதற்கு உள்ள வசதியும் வேறுபட்ட அளவு சமத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சி க்குமிடையிலானவை மற்றும் பிரதான கட்சிகளுக்கும் சிறிய கட்சிகளுக்கும் இடைப் பட்டவை என்ற அடிப்படை யில் இவை அமைந்துள்ளன.

விவாதங்களுக்கு அல்லது நிகழ்ச்சிகளுக்கு செவிமடுத்து வாக்காளர்கள் கட்சிகளை மாற்றுவதானால் அனேகமான நாடுகளில் தேர்தலில் ஸ்திர மற்ற தன்மை அதிகரிக்கின்ற போக்கு காணப்பட்டு வருகி ன்றது. சில தேர்தல் ஆய்வாளர்கள் வாக்காள ர்களின் உயர்ந்த பகுத்தறிவு தொடர்பாக கருத்து வெளி யிட்டிருக்கிறார்கள்.

அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான போட்டியாளர்கள் தங்களை பொதுமக்களின் நலன்களைப் பேணும் நம்பத்தகுந்த காவலர்களாக நிலைநிறுத்தி தமது கடந்த காலச் செயற்பாடுகளையும் எதிர்கால வாக்குறுதிகளையும் நியாயப்படுத்தும் பிரேரணை களை முன்வைக்கப்படும்படி தேர்தல் நிர்ப்பந்திக்கிறது. சுதந்திரமான தேர்தல் பிரசாரத்திற்கான முன்நிபந தனைகளாக அமைவன பேச்சு, ஒன்றுகூடல், ஒழுங்கு செய்தல் என்பவற்றிற்கான அடிப்படைச் சுதந்திரமும் ஆட்சிக்கு வருதற்குப் பிரச்சாரம் செய்வதற்கான வலுவான உரிமையுமாகும்.

## இலங்கையில் தேர்தல்கள்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் என்னும் விடயம் யாவரது கவனத்திற்குரியதும் சுவாரசி யமானதும் மட்டுமல்லாது இலங்கையின் ஒவ்வொரு பிரஜையைப் பொறுத்தவரை யிலும் திருப்புமுனையை ஏற்படுத்தக் கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக வும் உள்ளது.

‘‘சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் என்ற பெயரில் இன்று இலங்கையில் மேற்கொள்ள ப்படுவது அரசியல் யாப்பினால் உத்தரவாதமளி க்கப்பட்டுள்ள மக்களின் இறைமையை வெளிப்படை யாகவே கேலி செய்வதாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

இந்த வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்கான உரிமை என்பது ஒரு அடிப்படையான மனித உரிமையும் அடிப்படை உரிமையுமாகும்.

வாக்கின் மூலமாக ஒரு அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கும் அத்துடன் ஒரு அரசாங்கத்தை மாற்றுவதற் கும் மக்கள் கொண்டுள்ள சுதந்திரமான விருப்பத்தின் வெளிப்பாடாகவே ஒரு தேர்தல் கருதப்படுகின்றது.

வெள்ளையரல்லாதோர் வாழுகின்ற ஏனைய குடியேற்ற நாடுகளுக்கு முன்னர் இலங்கை சர்வசன வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டது. டொனமூர் ஆணைக்குழு 1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரி மையை வழங்கியது. ஆரம்ப காலங்களில் முறைகேடுகள் துஷ்பிரயோகங்கள், ஆள்மா றாட்டம், சட்டவிரோதமாக கைமாறுகளை அளித்தல்; சில நேரங்களில் வாக்கா ளர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்வதைத் தடை செய்தல் ஆகிய நடவடிக்கைகளே காணப்பட்டன.

தேர்தல் செய்முறையில் பாரிய அளவிலான துஷ்பிரயோகம் என்பது அண்மைக்கால நிகழ்வாக இருப்பதுடன் அண்மையில் நடந்த சில குறிப்பிட்ட தேர்தல்களின் போதே மிகவும் மோசமான முறையில் வெளிப்பட்டது. அண்மைக காலத்தில் நடந்த சில தேர்தல்கள் வன்செயலி னாலும் முறைகேடுகளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்கப்படுத்தப்பட்டுள்ளன. பயமுறுத்தல், காடைத்தனம், சேறு பூசுதல், அபகீர்த்தி ஏற்படுத்துதல், வாக்களிப்பு முகவர்களை பலவந்தமாக வெளியேற்றுதல், ஆயுதக் குழுக்களால் அச்ச உணர்வு உருவாக்கப்படுதல். வாக்கு மோசடி, பெருமளவில் வாக்குகளைத் திணித்து வாக்குப் பெட்டிகளை நிரப்புதல் ஆகிய செயற்பாடுகள் கடந்த சில தசாப்தங்களில் நடைபெற்ற தேர்தல்களின் பண்புகளாக உள்ளன.

எதிர்காலத்தில் சுதந்திரமானதுமான நீதியானதுமான தேர்தல்கள் என்றாவது நடாத்தப்பட முடியுமா என்ற பயத்தினை உண்மையில் இந்தப்பெயர்போன தேர்தல்கள் உருவாக்கியுள்ளன.

சுதந்திரத்தின் பின், இரண்டு கட்டங்களாக நாம் தேர்தல் முகாமைத்துவத்தை அவதானிக்கலாம். 1948 முதல் 1977 வரையிலான காலப் பகுதி ஆரம்பக்கட்ட மாகும். 1978 இற்குப் பிந்திய காலப்பகுதி மிகவும் மோசமான கட்டமாகும்.

## ஆரம்பக்கட்டம்

தேர்தல் என்றால் வேடிக்கையும் விளையாட்டும் எனக்கருதப்பட்ட காலப்பகுதி இது. இந்தக்காலத்தில் வசைப் பாடல்கள் இராகமில்லாமல் எழுச்சியுடன் பாடப்பட்டன. அப்போது தோழமையும், நட்பும் நிலவியது.

ஆரம்பக்கட்டத்தில் தேர்தல் ஒன்றை நடாத்துவது என்பது மிகுந்த கவனம் செலுத்தப்படவேண்டிய நடவடிக்கை மட்டுமன்றி, புனிதமான கடமையாகவும் இருந்தது. அரச சேவையும் பொலிஸ் சேவையும் கட்சி சார்ந்தவையாகவோ அரசியல் மயப்படுத்தப்பட்டவையாகவோ, அரசியல்வாதிகளுக்கு கட்டுப்பட்டவையாகவோ இருக்கவில்லை.

வாக்களிப்ப வர்களைத் திட்டமிட்டு தடைசெய்தல் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாக மிக அரிதாகவே காணப்பட்டது. ஆள்மாறாட்டம் ஒரு அரிதான நிகழ்வாகவே இருந்தது. வாக்களிப்பு நிலையங்களுக்குள் ஊசி விழுந்தால் கூட சத்தம் கேட்குமளவிற்கு அமைதி நிலவும்.

## நிலை மாறும் கட்டம்

தேர்தல்களின் தவறான முகாமைத்துவத்தில் காணப்பட்ட நிலை மாறும் கட்டமாக 1970 முதல் 1977 வரையிலான காலப்பகுதி அமைந்தது. தேர்தல் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் படவில்லை.


1970 ஆம் ஆண்டின் தேர்தல்களைத் தொடர்ந்து முதற்தடவையாக தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்கள் இடம்பெற்றன. 1971 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஜே.வி.பி கிளர்ச்சி அதிர்ச்சி ஊட்டுவதாகவும் கொடூரமானதாகவும், முன்னெப்போதும் இடம்பெறாததாகவும் அமைந்தது.

மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை உள்ளூர் முயற்சியாளர்களை வறியவர்களாக்கியது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல், பாராளு மன்றத்தில் இருந்த பலமான பெரும்பான்மையைப் பயன் படுத்தி அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு புறம்பான நடை முறைகளின் மூலம் பாராளு மன்றத்தின் ஆயுட்காலம் இரண்டு வருடங்களால் நீடிக்கப்பட்டது. இந்த அடக்குமுறை நடவடிக்கைகளின் விளைவாக இனக் குரோதத்திற்கு வித்திடப் பட்டதுடன் தமிழ் மக்கள் அன்னியப்படுத்தப் பட்டனர்.

மோசமான பொருளாதாரக் கஷ்டங்கள் மக்கள் மீது திணிக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ்ப் பயங்கரவாதம் பிரிவினைவாதம் 1980 களின் ஜே.வி.பி பயங்கரவாதம் என்பவற்றிற்கு வழிவகுத்தன.

## இகழ்வான சட்டம்

4/5 பங்கு பெரும்பான்மையுடன் ஐ.தே.க யை ஆட்சி பீடமேற்றிய 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்கள் முடிவடைந்ததுடன், இகழ்வான தேர்தல் கட்டத்திற்குள் இலங்கை பிரவேசித்தது. 1977 ஆம் ஆண்டில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடாத்திய மைக்காக ஐக்கிய முன்னணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திற்கு உரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும்.

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஒரு பக்கச் சார்பான விவகாரமாக அமைந்தது. அப்போது பதவியிலிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அவர்கள் தனது பிரதான போட்டியாள ரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் குடியுரிமையை திறமையாகத் திட்டமிட்டு நீக்கியதன் மூலம் அவரை போட்டியிட முடியாத வாறு பண்ணினார்.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் பெற்ற அமோக வெற்றி, 1977 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத தின் ஆயுட்காலத்தை மேலும் 6 வருடங்களால் நீடிப்பதற்காக 1982 இல் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு அவரைத் தூண்டியது. இது உண்மை யில் வெட்கம் கெட்ட ஒரு நடவடிக்கையாக அமைந்தது.

எதிர்பார்த்தவாறே மக்கள் தேர்தல்களில் வைத்திருந்த நம்பிக்கையை இழந்தார்கள். ஏனெனில் இந்த நிகழ்வின் பின்னர். தாம் சக்தியற்ற வர்களாக ஆக்கப்பட்டிருப் பதை மக்கள் உணர்ந்தார் கள். மேலும் ஆள்மாறாட்டம் பயமுறுத்தல், காடைத்தனம், அரச வளங்களின் துஷ்பிர யோகம், அரசியல் எதிரிகளை பழிவாங்குதல் உள்ளிட்ட சகலவிதமான மோசடி நடவடி க்கைகளிலும் ஆளும் கட்சி ஈடுபட்டது.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் அசாதாரணமான நிகழ் வுகளாக அமைந்தன. இத்தேர்தல்கள் ஜே.வி.பி, எல்.ரி.ரி.இ. வன்செயல்கள் திகில் நாடாளவிய குழப்பம் என்பவற்றால் கறைப்படுத்தப் பட்டதுடன், வடக்கு கிழக்கில் I.P.K.F நிலை கொண்டிருந்த மையால் அழுத்தத்தையும் பெற்றிருந்தன.


உண்மையில் இவ்விரு தேர்தல்களும் மக்களின் உண்மையான விருப்பத்தினைப் பிரதிபலிக் கவில்லை. பயங்கரவாத நிலைமை என்ற போர்வை யில் மறைந்து கொண்டு, ஆளுங்கட்சி அரச இயந்திரத் தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியது.

நீதியானதுமான நியாயமான துமான சமுதாயம் ஒன்றை உருவாக்கப் போவதாக வாக்குறுதி அளித்து 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க ஆட்சி சகல எதிர்பார்ப்புக் களுக்கும் மாறாக சுதந்திரமானதும் நீதியானது மான தேர்தல் என்ற விடயத்தைப் பொறுத்தவரை அழிவையே உண்டு பண்ணியது.

''வெற்றி பெறுபவர் எல்லா நோய் அறிகுறிகளையும் பெற்று விடுகிறார்'' இந்நிலை எயிட்ஸ் (AIDS) நோயை விடக் கொடிய நோய் என அழைக்கப்படக்கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் பிரதான அங்கங்களாகிய தேர்தல், அரசாங்க சேவை, நீதித்துறை, சமூக நலன்புரிச் சேவைகள் போன்றவற்றை குரோதமான அரசியல் மயமாக்கற் செய்முறை பாதித்து சீர்குலையச் செய்தது. விருப்பத்தெரிவு வாக்குமுறையானது கட்சிகளு க்குள்ளும், கட்சிகளுக்கி டையிலும் சகலவிதமான திரிபுகளையும், பிளவு களையும், மோதல்களையும் உருவாக்கியுள்ளது.

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெற்ற பொருளாதாரத் தாராள மயமாக்கல், இலஞ்சம், ஊழல் என்பவற்றின் பரவல் அரசியல்வாதிகளின் ஆதரவு ஆகியவற்றின் விளைவாக அரசியல் ஆதரவாளர்கள் நிதியுதவி அளிக்கும் முதலாளிகள், காடையர்கள், கூலிப்படைகள், கொலை யாளிகள் ஆகியோரைக் கொண்ட பலம்பொருந்திய ஒரு வகுப்பினர் தோற்றம் பெற்றனர். இவர்கள் கள்ளக்கடத்தல், மதுபான விற்பனை, சூதாட்டம், சட்ட விரோத மரவியாபாரம், விபச்சாரம் மற்றும் ஏனைய சட்ட விரோத நடவடிக் கைகளில் ஈடுபட்டு பெருமளவு பணம் சம்பாதித்தனர்.

தேர்தல் துஷ்பிரயோகம், முறை கேடுகள், வன்செயல் ஆகியவற்றை ஊக்கு விப்பவர்களும், பரப்புவர்களும் இவர்களே. தேர்தலொன்றுக்கு இன்றியமையாத ஒரு குழுவினராக இவர்கள் இருக்கின்றனர். இக்காலகட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டத்தில் மக்கள் முற்றிலும் நம்பிக்கை யிழந்தும், விரக்தியடைந்தும், கோபம டைந்தும் காணப்பட்டனர்.

அவர்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. அவர்கள் ஆரோக்கியமான சிந்தனை யாகக் கொண்ட, ஜனநாயக ஆட்சிக்கு மீண்டும் செல்ல விரும்பினார்கள். 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்ன ணிக் கூட்டமைப்பு மிகவும் சிறிய பெரும்பான்மையாகிய ஒரு ஆசனத்தைப் பெரும்பான் மையாகப் பெற்று வெற்றி பெற்றது.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் 2/3 பெரும்பான்மையைப் பெற்று வெற்றி ஈட்டினார். இந்த அமோக வெற்றி மக்களின் விருப்பிற்கும், எந்த அளவுக்கு ஒரு ஆளுங்கட்சி தேர்தலில் தில்லுமுல்லுகளை மேற்கொ ள்ளலாம் என்பதற்கும் சான்று பகர்வதாக அமைகின்றது.

## வயம்ப

வயம்ப மாகாண சபைத் தேர்தல், 5 மாகாணசபைத் தேர்தல்கள், 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், 2000 ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் ஆகிய தேர்தல்களில் இடம் பெற்ற பெருமளவான துஷ்பிரயோகங்கள், முறை கேடுகள், வன்செயல்கள் ஆகியவற்றை இப்போது நான் விரும்புகிறேன். முன்னெப் போதும் இடம்பெறாத அள விற்கு வயம்ப மாகாண சபைத் தேர்தலில் நடந்த அரச ஆதரவுடனான தேர்தல் மோசடியின்போது வாக்கு அட்டைகளை விநியோகிக் காமை, பறித்தமை, காசுக்கு வாங்கியமை அல்லது பலவந்தமாகச் சேகரித்தமை தொடர்பான ஊழல்களும், முறைகேடுகளும் அதிகரித் துக் காணப்பட்டன.



குறிப்பாக வயம்ப மாகாண சபைத் தேர்தலில் பல இடங்களில் வாக்காளர்களும், வாக்களிப்பு முகவர்களும் பயமுறுத் தலுக்கு உள்ளாக்கப்பட்டதன் மூலம் வாக்களிப்பு நிலை யங்களுக்குச் செல்லாது தடுக்கப்பட்டனர் அல்லது பகிரங்கமாக துரத்தப்பட்டனர்.

வயம்ப் கத்தோலிக்க தேவாலயம், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக் கான மக்கள் செயற்பாடு சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக் கான இயக்கம் தேர்தல் வன்செயல்களைக் கண்காணி ப்பதற்கான நிலையம் போன்ற சுயாதீன தேர்தல் கண்காணிப் புக் குழுக்களின் அறிக்கை கள் உண்மையில் திகிலூட்டு வதாக அமைகின்றன.

தேர்தல் வன்முறைகள், காடைத்தனம், பயமுறுத்தல், முறைகேடுகள் நம்பமுடியாத அளவில் இடம்பெற்றிருப்ப தனை இந்த அறிக்கைகள் தெளிவாக எடுத்துக் காட்டு கின்றன.

எப்படியும் வெற்றியடைய வேண்டும் என்ற நோக்க த்துடன், பாரிய அளவிலும் முன்னெப்போதுமில்லாத விதத்திலும் அரசுக்குரிய மனித மற்றும் பௌதிக வளங்கள் இத்தேர்தலில் துஷ்பிரயோகம் செய்யப்பட டன.

## பொதுத்தேர்தல் - 2001

தேர்தல் என்றால், எதிர்பார்ப்பி னைவிட, கவலையும், அச்ச உணர்வுமே மக்களிடம் மேலோங்கியிருந்தது. தேர்தலுக்கு முந்திய கால த்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிகள் பகிரங்கமாகவே மீறப்பட்டன. இலத்திரனியல் ஊடகத்தில் நேர ஒதுக்கீடோ அல்லது அரசின் வேறு எந்த உத்தி யோகபூர்வ நிகழ்வோ இருந்தாலும், ஆட்சியில் உள்ள கட்சியே அவற்றை முழுமையாகப் பயன்ப டுததியது. உண்மையில் இந்த வளங்களை அரசியல் பிரசாரங்களுக்கோ அல்லது கட்சி சார்பான பிரசாரத்தை ஊக்குவிப்பதற்கோ பயன்படுத் தக்கூடாது.

தேர்தலொன்றில் வெற்றி பெறுவதற்கான அரசியல் போட்டியில் காரணமாக வன்முறையைப் பயன்படு த்துதல் மிகவும் கவலை க்குரிய விடயமாகும். கொலைகளும், குழப்பங்க ளும் பரவலாக இடம் பெறுகின்றன.

தேர்தல் வாக்குகளினாலா அல்லது துப்பாக்கிகளினாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்கப்படுகிறது என்பதே தற்போது எழுப்ப ப்படும் நியாயமான வினாவாகும். நாட்டின் அநேகமான பிரதேசங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இவைகள் அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கே காணப்பட்டது.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் அவ்வாறு செய்வதற்கு சக்தியற்ற வர்களாகவிருந்தனர் அல்லது இரத்த ஆறு ஓடுவதனை மறைமுகமாக ஊக்குவிப்பிப்ப வர்களாகவிருந்தனர்.

''விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன'' என்று கூறுவதனைத் தவிர, வன்முறையைத் தடுப்பதற்கு வேறு எதனையும் செய்ய முடியாதவர்களாக பொலிசார் இருந்தனர். அரசியலமைப்புச் சட்டத்திற்கான 17 ஆவது திருத்தம் சட்டமாக்கப்பட்டிருக கின்ற போதிலும் கூட, தேர்த லுக்கு நிதிய நடவடிக்கைகள் சுதந்திரமானவையாகவும், நீதியானவையாகவும் காண ப்படவில்லை. 17 ஆவது திருத்தம் எமது தேர்தல் செய்முறையை கூடியளவிற்கு பக்கச்சார்பற்றதாக்குவதற்கு முயல்கின்றது. இந்தத் திருத்தச்சட்டம் நிறைவேற்ற ப்பட்டிருக்கின்ற போதிலும், பொலிஸ் உத்தியோகத்த வர்களின், இடமாற்றம் அரச ஊடகத்தில் நடைபெறும் பக்கச்சார்பான பிரசாரம், அரச துறையில் உள்ள பல்லாயிரக் கணக்கான ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குதல், முக்கிய அதிகாரிகளை பதவி நீக்கம் செய்தல் போன்ற நடவடிக் கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகள் டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலிற்போதும், குறிப்பாக கிராமிய பிரதேசங்களில் தொடர்ந்தன. கிராமிய பிரதேசங்கள் ஏனைய பிரதேசங்களைப் போல் இலகுவில் சென்றடைய முடியாதவையாக இருப்பதனால் ஊடகங்கள் இங்குள்ள நிலைமைகளை ஒப்பீட்டளவில் குறைவாகவே வெளிப்படுத்துகின்றன.

மாற்றுவழி

இந்த நோய்க்கு ஏதேனும் மாற்றுவழி இருக்கிறதா? இலகுவான அல்லது உரிய மாற்றுவழி இதற்கு இல்லை.

முதலாவதாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதிமுறை ஒழிக்கப்பட்டு, வெஸ்ட் மினிஸ்டர்முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

சட்டத்தில் காணப்படுகின்ற தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு உதவக் கூடிய சகல ஏற்பாடுகளும் நீக்கப்பட வேண்டும்.

ஆட்சி முறையின் சகல அங்கங்களும், பொறிமுறை களும் அரசியல் மயமாக்கலி லிருந்து மீட்கப்பட்டு, ஜனநாயக மயப்படுத்தப்படா விட்டாலும், படுத்தப்படும் வரையும் 4 சுதந்திர ஆணைக்குகுழுக்களையும் ஸ்தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கின்ற விளைவுக ளைக் கொண்டு வரமுடியா மல் போகலாம். வாக்களிப்ப வர்கள் தேசிய அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படல் வேண் டும்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடுதவத ற்கான சுதந்திரம் ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக அரச ஊடகங்க ளினால் நடாத்தப்படும் பக்கச்சார்பான அரசியல் பிரசாரம் கவனமாகக் கண்காணிக்கப் படுவதோடு, குற்றமிழைப் பவர்கள் விரைவாகத் தண்டிக்கப்படவும் வேண்டும்.

எமது மனநிலை, ஒன்றிணைந்த மதிநுட்பம், அரசியல் கலாச்சாரம் ஆகியவற்றில் பாரிய மாற்றங் கள் ஏற்படும் அளவுக்கு எமது முழு விழுமிய முறைமையையும் நாம் மாற்றிக் கொள்ளும் வரை நாம் எதனையும் அடைந்து விட முடியாது.

வேறு வகையில் கூறுவதாக இருந்தால் முன்மாதிரியாகக் கொள்ளக் கூடிய பூரணமான மாற்றமே இன்றைய கால கட்டத்தின் தேவையாக உள்ளது. அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரமானதும் நியாயமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதுமான தேர்தல் நடைபெறாவிட்டால் ஜன நாயகம் என்பதற்கு எதுவித அர்த்தமும் இருக்காது.

தேர்தல்கள் எதனைத் தீர்மானிக்கின்றன. இவற்றின் உண்மையான தாக்கம் தொடர்பாக சந்தேகிப்பதற்கு சில அடிப்படைகள் உள்ளன. அனேகமான தேசிய இலக்குகள் தொடர்பாக ஒரு கணிசமான கருத்தொருமிப்பு நிலவும் பொழுதே, ஜனநாயகம் தொழிற்படுகின்றது. ஆகையால் தேர்தல்கள் ஆட்சி மாற்றங்களுக்கு வழிவகுக்கும்போது, பெரும் பாலும் அந்த மாற்றங்களால் செயற்பாடுகள் மாறுகின்றன என்பதை விட ஆட்கள் மாறுகின்றார்கள் என்பதே உண்மையாகும். இதன் விளைவாக, புதிய போக்குகளைவிட புதிய முகங்களும், புதிய ஆற்றல்களுமே அறிமுகப்படுத்தப் படுகின்றன.

தேர்தலானது அரசியல் முறைமைக்கு உயிர் கொடுப்பதுடன் நெகிழ்ச்சித் தன்மையையும் அளிக்கின்றது. அவற்றைவிட சிறந்த மாற்று வழி இல்லாத காரணத்தினால், தேர்தல்கள் ஜனநாயகத்தின் உயிர் நாடியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

■■■■■■■■■■

## தேசிய கிறிஸ்தவ மன்ற செய்திகள்

(12ம் பக்க தொடர்ச்சி...)

### கருத்தரங்கு

கொழும்பு ஜெயவர்தனபுர பழ்கலைக் கழகத்தை சேர்ந்த விரிவுறையாளர் திரு. உதயகுமார அமரசிங்க அவர்களால் குற்றச்செயல், பாதாள குழுக்களைப்பற்றி கருத்தரங்கு ஒன்று தேசிய கிறிஸ்தவ மன்ற ஊழியர்களின் கலந்துரையாடலுக்காக நடைபெற்றது.

### பெண்கள் தினம்

தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பெண்கள் பகுதி சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தது.

### நீதிக்கும், சமாதானத்திற்குமான குழு

நீதிக்கும், சமாதானத்திற்குமான குழு ஒழுங்கு செய்த கூட்டமொன்று கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்றது. இக் கூட்டம் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான குழு, தேசிய கிறிஸ்தவ மன்ற நீதிக்கும், சமாதானத்துக்குமான குழு ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இக் கூட்டத்தில் தொடர வேண்டிய பணிகளுக்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு நீதி, சமாதான செயற்பாடுகள் தொடாந்து முன்னெடுத்துச் செல்வதென தீர்மானிக்கப்பட்டது. மனித உரிமைகளுக்கான கருத்தரங்கு ஒன்று கடந்த மார்ச் 16ம் 17ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து பேர் இக்கருத்தரங்கிலே கலந்துக் கொணடனர். ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்க அங்கத்தவர்கள் இக்கருத்தரங்கை நடத்தினா.

### அபிவிருத்திக் குழு

அபிவிருத்தி பற்றிய கருத்தரங்குகளின் தொடரச்சியாக, கருத்தரங்கொன்று வவுனியாவிலே பெப்ரவரி 12ம் திகதி நடைபெற்றது. இக் கருத்தரங்கின் ஒருபகுதியாக காலி, வவுனியா திருச்சபை குழுக்களின் கலாச்சார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Rev. A.S. Thevagunananthan,
CSI Church,
Uduvil,
CHUNNAKAM

If undelivered please return to

**National Christian Council of Sri Lanka**
**368/6, Bauddhaloka Mawatha,**
**Colombo 00700**
**Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org